பக்கங்கள் 15+3

மாலை முரசு

## வயோதிபரின் சடலம் வடமராட்சியில் மீட்பு!

(எஸ்.ரகுதீஸ்)

யாழ். வடமராட்சியில் தனிமையில் வசித்து வந்த வயோதிபர் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 16 செவ்வாய்க்கிழமை 31.12.2024 | அதிர்வு 152

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# கிழக்கில் ஆள்கள் எவரும் இன்றி கரை ஒதுங்கிய இரண்டு படகுகள்

### மியன்மார் அகதிகள் பயணித்த படகுகளா என்று ஆராய்வு

(ந.லோகதயாளன்)

மியன்மார் நாட்டு அகதிகள் பயணித்த படகுகள் என நம்பப் படும் இரண்டு படகுகள் இலங்கையின் இரு வேறு பகுதி களில் இன்று காலை கரை ஒதுங்கியுள்ளன.

முல்லைத்தீவில் அண்மையில் மியன்மார் நாட்டு அகதிகளுடன் படகு ஒன்று கரை ஒதுங்கி யிருந்தது. அந்தப் படகுடன் பயணித்த மேலும் இரண்டு படகு கள் சேதமடைந்தமையால் கட லில் கைவிடப்பட்டன என்றுஉயிர் தப்பிய மியன்மார் அகதிகள் தெரிவித்திருந்தனர்.

03

# தந்தையும் இளைய மகனும் தாக்கியதில் மூத்த மகன் பலி

### பூண்டுலோயாவில் பயங்கரம்







(பி.கேதீஸ்)

பூண்டுலோயாவில் தந்தையும், இளைய மகனும் இணைந்து மூத்த மகனை அடித்துக் கொலை செய்துள்ள னர்.

பூண்டுலோயா – டன்சினன் தோட்டத் தின் கீழ்ப் பிரிவு பகுதியைச் சேர்ந்த நடேசன் நவீன்குமார் என்ற 25 வயது டைய ஒரு பிள்ளையின் தந்தையே கொலை செய்யப்பட்டுள்ளார்.

03

# கறைபடியாத கரங்களுடன் இருந்தால்தான் மக்களுக்குச் சிறப்பான சேவை செய்யலாம்

## முல்லைத்தீவில் ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு





"கறைபடியாத கரங்களுடன் இருந்தால்தான் பொதுமக்களுக்குச் சிறப்பான சேவையைச் செய்ய முடியும். ஜனாதிபதியும் இதைத்தான் வலியுறுத்தியிருக்கின்றார். எங்கள் அரச பணியாளர்கள் மக்களுக்கு சேவை வழங்கும் வகையில் எதிர்காலத்தில் தங்களை மாற்றிக்கொள்வதற்குத் தயாராக வேண்டும்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சும், முல்லைத்தீவு மாவட்ட செயலகமும் இணைந்து நடத்திய உலக மண் தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட செயலர் அ.உமாமகேஸ்வரன் நிகழ்வின் தலைமை உரையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்துதரவேண்டும் என ஆளுநரைக் கோரியதுடன் சுற்றுலாத்துறை ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திகளை முன்னெடுக்க நிதி ஒதுக்கீடு அதிகரித்துத் தருமாறும் கேட்டுக்கொண்டார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் தனதுரையில்,

"நாங்கள் கல்வி கற்கின்ற காலத்தில் இவ்வாறு பல தினங்கள் கடைப்பிடிக்கப்படவில்லை. இப்போது ஐ.நாவால் பல தினங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவ்வாறு ஒரு தினத்தை அறிமுகப்படுத்துவதென்றால் அதன் முக்கியத்தும் அல்லது பயன்பாடு இப்போது தேவைப்படுகின்றது என்பது அர்த்தம்.

இந்த மண்ணை இயற்கை சீரழிக்கவில்லை. மனிதன்தான் சீரழித்துக் கொண்டிருக்கின்றான்.

சகல வளமும் கொண்டது எங்கள் நாடு. அதைப்போல எமது மாகாணமும் சகல வளங்களையும் காலநிலையையும் கொண்டிருக்கின்றது. அப்படியான எமது மாகாணத்தில் விவசாயிகள் தங்களை இன்னமும் ஏழை விவசாயிகள் என்று விளித்துக்கூறிக்கொண்டிருக்கின்றனர். விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவேண்டும். அவர்களுக்கு நவீன முறைமையிலான விவசாயத்தை அறிமுகப்படுத்தவேண்டும். அவர்களின் உற்பத்தியையும், அதன் தரத்தையும் ஊக்குவிக்கவேண்டும்.

அபிவிருத்திகளை முன்னெடுக்கும் போது கண்மூடித்தனமாக எதிர்க்கின்றார்கள். அபிவிருத்திகளை முன்னெடுக்கும்போது ஆகக்குறைந்த சூழல் பாதிப்பு இருக்கும். அதை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவுக்கு குறைத்து நாம் செய்யவேண்டும். அதை விடுத்து எல்லாவற்றையும் எதிர்க்கும் மனநிலையில் நோக்கிக் கொண்டிருந்தால் நாம் முன்னேற முடியாது.

அதிகாரிகளுடன் போராட வேண்டியிருப்பதாக அமைச்சர்களே கூறியிருக்கின்றனர். அது உண்மைதான். பல அதிகாரிகள் பிழையானவற்றுக்குப் பழகிவிட்டார்கள். அவர்களை அதிலிருந்து மாற்றுவதற்குப் பாடுபட வேண்டியிருக்கின்றது.

எங்கள் வடக்கு மாகாணமும் அதிலிருந்து விதிவிலக்கானது அல்ல. நேர்மையானவர்கள் பழிவாங்கப்படுகின்றார்கள் அல்லது பந்தாடப்படுகின்றார்கள். அதைப்போலத்தான் வசதி படைத்த – செல்வாக்கானவர்கள் அரச திணைக்களங்களுக்கு வந்தால் அவர்களுக்கு மரியாதையுடன் விரைந்து சேவை வழங்கும் அதிகாரிகள், ஏழை எளிய மக்கள் வந்தால் அலைக்கழிக்கின்றனர். இந்த நிலைமை மாற வேண்டும்.

புதிய அரசு மக்கள் நேய சேவையைக் கொண்டு செல்லவே விரும்புகின்றது. அரச அதிகாரிகள் அதற்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும்."

– என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலர் ஆ.சிறி ஆகியோர் கலந்துகொண்டனர்.

உலக மண் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.









# புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிவு விவகாரம்: 3 வினாக்களுக்கு இலவசப் புள்ளி வழங்கும் நடவடிக்கை அடிப்படை மனித உரிமை மீறல்

## உயர்நீதிமன்றம் இன்று தீர்ப்பு

2024ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் பகுதி வினாத்தாளின் மூன்று வினாக்களுக்கு இலவசப் புள்ளிகளை வழங்கும் நடவடிக்கையானது அடிப்படை மனித உரிமை மீறல் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், நிபுணர் குழுவால் முன்வைக்கப்பட்ட மூன்று பரிந்துரைகளில் பொருத்தமான ஒரு பரிந்துரையை அமுல்படுத்துமாறும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், வினாக்கள் கசிந்த சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் நபர்களான ஐ.ஜி.பி பிரேமதிலக மற்றும் சமிந்த குமார இளங்கசிங்க ஆகியோர் முறையே 30 இலட்சம் ரூபா மற்றும் 20 இலட்சம் ரூபாவை அரசுக்கு இழப்பீடாகச் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மற்றும் பெற்றோர்களால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களை ஆராய்ந்த பின்னர், யசந்த கோதாகொட, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற ஆயம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

# ஆளுநர் தலைமையில் மன்னாரில் வியாழக்கிழமை நடமாடும் சேவை




வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறும் நடமாடும் சேவை மன்னார் மாவட்ட செயலகத்தில் நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

மன்னார் மாவட்ட பொதுமக்கள் இதில் கலந்துகொண்டு தமது சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

# சின்னாறு பொழுதுபோக்கு பூங்கா புனரமைக்கப்பட்டு இன்று கையளிப்பு



தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் நிதியீட்டத்தின் மூலம் 11.68 மில்லியன் ரூபா செலவில் 2018ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட முல்லைத்தீவு – சின்னாறு பொழுதுபோக்கு பூங்கா, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிதியீட்டத்தின் ஊடாக புனரமைக்கப்பட்டு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால், 2024ஆம் ஆண்டு உலக மண் தினத்தை முன்னிட்டு கரைதுறைபற்று பிரதேசசபையிடம் இன்று செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலர் அ.உமாமகேஸ்வரன் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### தந்தையும்...

நேற்று மாலை தந்தையும், மூத்த மகனும் அதிக மது அருந்தியுள்ளனர். பின்னர் தந்தை வீட்டுக்கு வந்தபோது மூத்த மகன் வீட்டில் அதிக ஒலியில் பாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்துள்ளார்.

தந்தை மகனிடம் ஒலியைக் குறைக்கச் சொல்ல, கோபமடைந்த மகன் தந்தையைத் தாக்கியுள்ளார். பின்னர் தனது தம்பியையும் அவர் கட்டையால் தாக்க, கடைசியில் தந்தையும், இளைய மகனும் சேர்ந்து மேற்படி மூத்த மகனைக் கட்டைகளாலும், கற்களாலும் தாக்கிக் கொலை செய்துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட மூத்த மகன் தாக்கியதில் காயமடைந்த தந்தையும் (வயது 46), இளைய மகனும் (வயது 16) பொலிஸ் பாதுகாப்பில் கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட மூத்த மகனின் சடலம் நீதிவானின் ஸ்தல பரிசோதனையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### வயோதிபரின்...

உச்சிக்காடு, கரணவாய் தெற்கைச் சேர்ந்த மாணிக்கம் குணசேகரம் (வயது – 65) என்ற வயோதிபரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

இரண்டு பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் இவர், தனிமையில் வசித்து வந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை கட்டிலில் உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

### கிழக்கில்...

அவ்வாறு பழுதடைந்தபோது கைவிடப்பட்ட இரண்டு படகுகள் எனக் கருதப்படும் படகுகள் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் ஆள்கள் எவரும் இன்றி இன்று கரை ஒதுங்கியுள்ளன.

கரை ஒதுங்கிய படகுகள் தொடர்பில் கடற்படையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வரும் அதேநேரம் இரண்டு படகுகளும் மியன்மார் அகதிகள் பயணித்த படகுகள்தானா அல்லது வேறு படகுகளா எனவும் ஆராய்ந்து வருகின்றனர்.

# தமிழர் தாயகத்தில் மாணவரது கல்வியில் மீள் எழுச்சி தேவை!

## அதற்காக உதவுவதற்குத் தயார் என்கிறார் ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன்)



வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகத்தில் கடந்த காலங்களில் எழுச்சி பெற்றிருந்த மாணவர்களின் கல்வி, தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கவலை தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வீழ்ச்சியடைந்துள்ள கல்வியில் மீள் எழுச்சி தேவை எனவும், அதற்காக உதவுவற்குத் தாம் தயாராக இருக்கிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை, பத்தாம் குறிச்சி, அறிவொளிமையம் கல்வி நிலையத்தில், கல்வி பயிலும் மாணவர்கள் தமது கல்விச் சுற்றுலாவின் போது, முல்லைத் தீவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். இதன்போது குறித்த மாணவர்கள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் இல்லதுக்குச் சென்றதுடன், கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலில் மாணவர்கள் முன்னிலையில் கருத்துத் தெரிவிக்கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாணவர்களின் கல்வித்தரம் முன்னிலையில் இருந்தது.

ஆனால் தற்போது வடக்கு, கிழக்கில் எமது மாணவர்களின் கல்வித் தரம் குறைவடைந்து செல்கின்ற நிலைகளைக் காண்கின்றோம். இந்த நிலை மாறவேண்டும்.

எனவே அனைவரும் கல்வி கற்க வேண்டும். சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டும். உயர்ந்த நிலைகளைப் பெறவேண்டும் என்பதே மாணவர்கள் அனைவரதும் ஒரே இலக்காக இருக்க வேண்டும்.

எமது மாணவர்கள் கல்வியில் பிரதேசம், மாவட்டம், மாகாணம் என்ற நிலைகளைக் கடந்து தேசிய ரீதியிலும் வெற்றி பெறவேண்டும்.

மாணவர்கள் சிறந்த முறையில் கல்விகற்பதற்காக உதவிகளை வழங்குவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், புலம்பெயர் உறவுகள் என அனைவரும் தயாராக இருக்கின்றோம்.

இவ்வாறிருக்கும் போது வடக்கு, கிழக்கு மாணவர்கள் தேசிய ரீதியில் முதல் நிலை பெற்றார்கள் என்ற நிலையை ஏன் ஏற்படுத்த முடியாது. அது மாணவர்களான உங்களின் கைகளிலேயே இருக்கின்றது.

அதேவேளை, கல்வியில் சிறந்து விளங்குவதைப் போல், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டும். வடக்கு, கிழக்குத் தமிழ் பிள்ளைகள் கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவர்கள் என்ற நிலையைக் கொண்டுவர வேண்டும்.

இவ்வாறு எமது மாணவர்கள் ஒழுக்கத்திலும், கல்வியிலும் சிறந்து விளங்கும்போது எமது அடுத்தடுத்த சந்ததியினர் சிறந்து விளங்குவார்கள். – என்றார்.



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் பதுளை ஆலயத்துக்கு உதவி

## முதல் கட்டமாக 2 லட்சம் ரூபா நிதி வழங்கல்



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் மலையகத்தில் மேற்கொண்டுவரும் ஆன்மீக கல்வி சமூக நல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பதுளை – வேவெஸ்ஸ, 3 ஆவது மைல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்துக்குப் புனருத்தானம் மேற் கொள்வதற்கு முதலாம் கட்ட நிதியாக 2 லட்சம் ரூபாவை ஆலய நிர்வாகத்திடம் பதுளையில் இயங்கிவரும் மலையக சிறுவர் இல்லத்தில் வைத்து வழங்கியது.

நேற்று (30) திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் இந்த உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் அமுதகலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண் டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார்.

# தென். கிழக்குப் பல்கலைக்கழகம் தொழில்நுட்ப ரீதியில் வளர வேண்டும்

## இம்ரான் எம்.பி. தெரிவிப்பு



(அபு அலா, ஹஸ்பர் ஏ.எச்.)

தென். கிழக்குப் பல்கலைக்கழகம் தனது கல்விச் செயற்பாடுகளை நவீன தொழில்நுட்பத்துக்கு ஏற்ப மாற்றிய மைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர்,

நாட்டின் நாலா புறங்களையும் சேர்ந்த மாணவர்கள் வெளிவாரிப்பட்டப் படிப்புக்காக தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் தம்மை பதிவு செய்துள்ளனர். இவர்களில் தொழில் புரிவோரும் உள்ளனர். தொழில் இல்லாதோரும் உள்ளனர்.

இந்த வெளிவாரி மாணவர்கள் கற்றலுக்காக வார இறுதி நாள்களில் பல்கலைக்கழகத்துக்கு அழைக்கப் படுகின்றார்கள். தொழில் புரிவோர் வாரத்தில் 5 நாள்களும் தமது தொழில் நிலையங்களுக்குச் செல்லும் அதே வேளை வார இறுதி நாள்களில் பல் கலைக்கழகத்துக்கும் செல்ல வேண் டியுள்ளது. தொழில் இல்லாதோர் பெரும் பணச்செலவு செய்து பல் கலைக்கழகத்துக்குச் செல்ல வேண்டி யுள்ளது. ஒரு நாள் பல்கலைக்கழக சூழலில் தங்க வேண்டிய நிர்ப்பந்தமும் உள்ளது.

இதனால் பல சிரமங்களை இந்த மாணவர்கள் எதிர்நோக்கி வருகின்ற னர். இந்தச் சிரமங்களால் சிலர் தமது வெளிவாரிப் பட்டப்படிப்பைக் கைவிட்டும் உள்ளனர்.

இந்த விடயத்தை பல மாணவர்கள் எனது கவனத்துக்குக் கொண்டு வந் ததை அடுத்து இரண்டு முன்மொழி வுகளை முன்வைத்து பல்கலைக்கழக நிர்வாகத் துக்கு ஏற்கனவே கடிதம் அனுப்பினேன். ஒன்று பிராந்தியக் கற்கை நிலையங்களை ஏற்பாடு செய்வது. மற்றொன்று ஒன் லைன் வகுப்புகளை நடத்துவது.

எனினும், இந்த விடயங்களையும் பல்கலைக்கழக நிர்வாகம் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை. பல பல்கலைக்கழகங்கள் தமது தொழில்நுட் பங்களைப் பயன்படுத்தி ஒன்லைன் வகுப்புகளை நடத்தும் போது தென் கிழக் குப் பலக்லைக்கழகம் மட்டும் மாணவர்களை நேரடியாக பல்கலைக் கழகத்துக்கு அழைப்பதற்கான காரணம் என்ன வென்று எனக்குப் புரியவில்லை.

சிலவேளை நவீன தொழில்நுட்ப விடயங்களில் இந்தப் பல்கலைக்கழக ஆற்றல் குறைவு காரணமாக இருக் குமோ என எனக்கு எண்ணத் தோன்று கின்றது. அப்படி இருந்தால் அதனை வளர்த்து ஒன்லைன் வகுப்புகள் நடத்துவது குறித்து இந்தப் பலைக்கழகம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நவீன தொழில்நுட்ப யுகத்துக்கு இந்தப் பல்கலைக்கழகம் தன்னை மாற்றிக் கொள்ளாதவிடத்து எதிர்காலத் தில் இந்தப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிக் கற்கை நெறிக்கு விண் ணப்பிப்போர் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து விடும் ஆபத்து உள்ளதை சம்பந்தப் பட்டோர் விளங்கிக் கொள்ள வேண்டும்.– என்றார்.

# கல்முனை சாஹிராவுக்கு பஸ் கொள்வனவுக்கு நிதி

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)




கல்முனை சாஹிரா தேசிய பாட சாலையின் 75 ஆவது ஆண்டை முன் னிட்டு பாடசாலைக்குப் பஸ் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு நிதி வழங் கப்பட்டுள்ளது.

கல்முனை சாஹிரா பாடசாலையில் கல்வி பயின்ற பழைய மாணவர்களான ஸஹிரியன்ஸ் லயன்ஸ் 2003 - 2006 பிரிவினர் பாடசாலைக்கு 8 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான காசோலையை சனிக்கிழமை (28) பாடசாலையின் அதிபர் எம்.ஐ. ஜாபிரிடம் கையளித்தனர்.

கல்முனை சாஹிரா தேசிய பாட சாலையின் 75 ஆவது ஆண்டினைக் கொண்டாடும் முகமாக பாடசாலையில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மற்றும் அது தொடர்பான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களும் வகுக்கப்பட்டு இடம் பெற்று வருகின்றன.

இந்த நிகழ்வில், பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் என்.எம்.றிஸ் மிர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத தின் உதவிச் செயலாளர் எம்.ஐ.எம். றியாஸ் உட்பட பிரதி, உதவி அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சட்டத்தின் ஆட்சி இருளில்!

ஒரு சமூகம் - ஒரு நாடு - ஒழுங்கானதாக, நேர்சீரானதாக, கட்டுறுதியானதாக அமைய வேண்டுமானால் அதற்கு அந்தச் சமூகத்தில், நாட்டில், சட்டத்தின் ஆட்சி ஒழுங்காக நிலவ வேண்டும்.

சட்டத்தின் ஆட்சி என்பது சட்டப் புத்தகத்தில் - கருப்பு, வெள்ளைத் தாளில், அச்சில் சட்டங்கள் பதியப்பட்டிருப்பது அல்ல. அவற்றையும் தாண்டி, சட்டத்தில் இருப்பவை நடைமுறையில் செயல்படத் தக்கவையாக இருக்க வேண்டும்.

அதுதான் இலங்கையில் பிரச்சினை. சட்டப் புத்தகத்தில் இருப்பவை செயலில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அதுவேதான் இலங்கைத் தீவில் சட்டத்தின் ஆட்சியின் பிரதான பின்னடைவு.

நாட்டின் சாதாரண சட்டம் மட்டுமின்றி, நாட்டின் மீயுயர் சட்டமான அரசமைப்பும் கூட, நடைமுறையாக்கத்தில் ஒழுங்காக இல்லை என்பதுதான் இலங்கையின் மிக மோசமான நிலைமையாகும்.

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கத் துக்கெனக் கொண்டுவரப்பட்ட அரசமைப் பின் 13 ஆவது திருத்தம் என்பது இலங்கை அரசமைப்புக்கான பின்னிணைப்பு அல்ல. அது அந்த அரசமைப்பின் ஓர் அங்கம். ஒரு பகுதி. ஆனால் அதன் பல அம்சங்கள் மட்டும் நாட்டில் நடைமுறையில் இல்லை.

நாட்டின் மிக உயர்ந்த சட்டமான அரச மைப்புச் சட்டத்தையே நடைமுறைப் படுத்த மாட்டோம் என்று வெளிப்படை யாகவே அடம் பிடிக்கும் அரசாங்கத்தை, சட்டரீதியான அரசு என்று அழைக்கும் - சர்வதேசம் கருதும் - ஓர் அவல நிலை தான் இன்று உள்ளது.

பல சட்டங்களும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு நடைமுறையில் இருக் கின்றன என்று அறிவிக்கப்பட்டாலும் அவை செயற்பாட்டில் இல்லை என்பது தான் இலங்கையில் சட்டத்தின் ஆட்சியின் பின்னடைவில் ஏற்பட்டுள்ள மிக மோச மான கட்டமாகும்.

1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் சட்டத்தின் பிரகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அவ்விடயம் தொடர்பில் அதீத அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அச்சட்டத்தின்படி நாட்டில் அரசியல் தஞ்சம் கோருவோர் உட்பட தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரையும் -அவர்கள்எந்தநாட்டுப்பிரஜைகளாயினும் - அவர்கள் தடுப்பு காவலில் உள்ள இடங் களுக்கு நேரில் சென்று நிலைமைகளை பரிசீலித்து, அவற்றை மேம்படுத்துவதற் கான உரிய பரிந்துரைகளை வழங்கும் அதிகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழு வுக்கு உண்டு.

ஆனால் அண்மையில் படகுகளில் வந்து கரை சேர்ந்த அல்லது கரைக்கு கூட்டி வரப்பட்ட மியான்மார் தேசத்தைச் சேர்ந்த 115 ரோஹிங்கியா அகதிகள் முல் லைத்தீவு விமானப்படை தளத்துக்கு அண்மையில் தடுத்து வைக்கப்பட்டுள் ளனர்.

அவர்களின் நிலைமையை நேரில் கண்டறியச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இரண்டு, மூன்று தடவைகள் முயன்றும் அவர்களைச் சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. படை அதிகாரிகளினால் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர்.


இது மனித உரிமைகள் சட்டத்தின் படியும் சர்வதேச மனிதாபிமான ஒழுங்கு களின் படியும் மிக மோசமான மனித உரிமை மீறல் நடவடிக்கையாகும்.

இந்த அகதிகளைப் பார்வையிடுவதற் கான உத்தரவை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு போன்றவற்றுக்கு வழங்குமாறு ஜனாதிபதியிடம் மனித உரிமைகள் ஆணைக்குழு கடிதம் மூலம் கெஞ்சும் நிலைமைதான் நாட்டில் நிலவுகின்றது.

மனித உரிமைகள் ஆணையமே தன்னு டைய கடமையை செய்ய அனுமதிக்கப் படாத அளவுக்குப் பாதுகாப்பு தரப்பினர் கெடுபிடி அட்டகாசங்களை மேற்கொள் கின்றர் என்பது இந்த விவகாரத்தை ஒட்டி அம்பலமாகி வருகின்றது.

நாட்டின் அரசாங்கம் நியமித்த மனித உரிமைகள் ஆணையமே நாட்டில் செயற் பட முடியாத இக்கட்டில் இருக்குமானால் அந்த நாட்டில் மனித உரிமைகள் நிலைமை எத்தகைய கேள்விக்குறியில் - கேலிக் குரியதாக - உள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

இந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சி என் பது இருட்டு அறையில் மூழ்கி கிடக் கின்றது. அது இப்போதைக்கு வெளிச் சத்துக்கு வரும் என்று நம்புவதற்கு இடம் இல்லை.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# விசுவமடு சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவும் பரிசில் வழங்கலும்

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு, விசுவமடு மத்திய சன சமூக நிலையத்தின் 12 ஆம் ஆண்டு நிறைவுவிழாவும், தேசிய வாசிப்புமாத பரிசில் வழங்கும் நிகழ்வும், விசுவமடு மத்திய சனசமூகநிலைய கேட்போர் கூடத்தில் மிகச் சிறப்பாக இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்து கொண்டார்.

அந்தவகையில் விசுவமடு மத்திய சனசமூகநிலையத்தின் விழாக் குழுத் தலைவர் இ.காந்தன் தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வு விருந்தினர் வரவேற்புடன் ஆரம்பமானது.

நிகழ்வில் விருந்தினர்களால் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு உரிய பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபைச் செயலாளர் ச.கிருசாந்தன், புதுக்குடியிருப்பு சன சமூக நிலைய அபிவிருத்தி உத்தியோ கத்தர் திருமதி ரூ.கல்யாணி, விசுவமடு மேற்கு கிராம அலுவலர் சஞ்ஜிதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# சிவனொளிபாதமலை பருவ காலத்தின் போது போதைப் பொருள்கள் பாவித்தால் நடவடிக்கை

**(மஸ்கெலியா )**

சிவனொளிபாதமலை பருவகாலத்தில் மது மற்றும் போதை பொருள் பாவித்து வருபவர்கள் மற்றும் அதனை சூசகமாக கொண்டு வருபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தை மீறி போதைப் பொருள் மற்றும் மதுபானம் கொண்டு வருபவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படுவார்கள் என்று ஹட்டன் வலய போதைப் பொருள் பிரிவின் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இதன்படி மதுபானங்கள், புகையிலை அடங்கிய போதைப் பொருள், மற்றும் போதைப் பொருள்களைத் தமது பொதிகளில் வைத்திருப்பது மற்றும் வர்த்தக நிலையங்களில் வைத்திருப்பது, விற்பனை செய்வது முற்றிலும் சட்ட விரோதமானது.

அதையும் மீறி இவ்வாறான போதைப் பொருள்கள் வைததிருந்தால் அவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிவனொளிபாதமலை உச்சியில் உள்ள ஆலயம் மற்றும் தங்குமிடம், மடங்கள், அடிவாரம் வரையுள்ள சகல வர்த்தக நிலையங்களிலும் சட்டவிரோதமான பொருள்கள் விற்பனை செய்வதைத் தடுப்பதற்காக விசேட போதைப் பொருள், தடுப்பு அதிகாரிகளை கண்காணிப்பில் ஈடுபடுத்தி உள்ளனர் என்று இரத்தினபுரி மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.




# மட்டக்களப்பு நடைபெற்ற மத்தியஸ்த தின நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 34 ஆவது தேசிய மத்தியஸ்த தின நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்ரினா யுலேக்கா முரளீதரன் தலைமையில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

முதலில் பங்கேற்பாளர்களின் பதிவுகள் நடைபெற்றது. தொடர்ந்து சர்வமத பிரார்த்தனை, வரவேற்புரை உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றன. நீதி அமைச்சின் மாவட்ட பயிற்சி உத்தியோகத்தர் எம்.ஐ.எம் ஆஸாத் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார்.

அத்துடன் மத்தியஸ்த சபைகளின் செயற்பாட்டை மேலும் வலுவடையச் செய்யும் நோக்கில் நீதி அமைச்சின் ஆலோசனைக்கு அமைய மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவால் ஒவ்வொரு மாட்டங்களிலும் இந்த நிகழ்வு இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் 25 வருடங்கள் மத்தியஸ்தராக கடமையாற்றிய மத்தியஸ்தர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். காத்தான்குடி பிரதேச மத்தியஸ்த சபையின் 3 மத்தியஸ்தர்கள் பாராட்டுப் பெற்றனர்.




மட்டக்களப்பு மாவட்டத்தில் 40 பெண் மத்தியஸ்தர்கள் உள்ள மத்திய சபையாக காத்தான்குடி பிரதேச மத்தியஸ்த சபை இருப்பதை பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

இது தவிர பாடசாலை மட்டத்தில் மத்தி யஸ்த தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பாடசாலைக் கற்றல் உபகரணங்கள் உட்பட சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான நிகழ்வில் மத்தியஸ்த சபையின் செயற்பாடுகள், அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட வெற்றிச் செயற்பாடுகள் தொடர்பிலும் அது எதிர்நேக்கும் சவால்கள் தொடர்பிலும் கருத்துரைகளும் அனுபவப் பகிர்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் உதவி அரச அதிபர் ஜீ. பிரணவன் உட்பட விசேட காணி மத்தியஸ்த சபை மற்றும் ஏனைய மத்திய சபைகளின் தவிசாளர்கள், மத்தியஸ்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





# கல்முனை ஸ்ரீ சுபத்ராராம விகாரையில் அன்னதான மண்டபம் திறந்து வைப்பு

(பாறுக் ஷிஹான்)

ஜனாதிபதி செயலகத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் திகாமடுல்ல மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் வேண்டுகோளுக்கு இணங்க நிர்மாணிக்கப்பட்ட கல்முனை ஸ்ரீ சுபத்ராராம மகா விகாரையின் அன்னதான மண்டப திறப்பு விழா சனிக்கிழமை (28) கல்முனை பிரதேச செயலாளர் டி.எம்.எம் அன்சார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்து கொண்டு மண்டபத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கௌரவ அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.பி.எம் சாஹீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு அதிதிகளாக கல்முனை விகாராதிபதி ரண்முத்துகல சங்கரத்தன தேரர், மணிக்கமடு ரஜமகா விகாராதிபதி சிலரத்தன தேரர்,தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான எஸ்.விஜிகரன், கே.எல் சபீக் ஆகியோர் கலந்து கொண்டனர். சுமார் 5 மில்லியன் ரூபா நிதியில் இந்த அன்னதான மண்டபம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# அம்பாறை மாவட்ட விவசாயக் கூட்டத்தில் விவசாய நிலங்கள் தொடர்பில் ஆராய்வு

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

அம்பாறை மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ள நிலமையால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

தற்போது சேனாநாயக்க குளத்தின் நீர்மட்டம் ஏறத்தாழ 99.6 அடிகள் காணப்படுகிறது என்று அம்பாறை மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

தற்போது வெள்ளத்தால் அழிவ டைந்த வயல் நிலங்கள், கால்வாய்கள் உட்பட 256 இடங்கள் தற்காலிகமாக சீர் செய்யப்பட்டு வருகின்றன என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆண்டு மாத்திரம் 338 விவசாயக் கால்வாய்கள் சேதமடைந்துள்ளன என்றும் 17 ஏரிகளும் பாதிக் கப்பட்டுள் என என்றும் மாகாண விவசாய பிரதி பணிப்பாளர் தெரிவித்தார்.

விதை ஆராய்ச்சி மையத்தின் அவசியத்தையும், விதைகளை சேமித்து வைக்கக் கூடிய விதை இல்லத்தின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.



கடந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 45 ஹெக்டேர் விவசாய நிலங் கள், தொற்று பாதிப்பு மற்றும் விலங் குகள் பாதிப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதில் 2.5 மில்லியன் விலங்குகள் பாதிக்கப்பட்டன என்றும் அவற்றுள் 9146 கோழிகள் இறந்துள்ளன என்றும் இடை மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட விவசாய பணிப்பாளர், மாகாண பிரதி விவசாய பணிப்பாளர், இடை மாகாண பிரதி பணிப்பாளர், விவசாய சேவைகள் பிரதி பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# கழிவுப் பொருள்களை அகற்றுவதில் மன்னார் மக்கள் பெரும் சிரமத்தில்!

## அருட்பணி மார்க்கஸ் அடிகளார் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்ட மக்கள் குப்பைகளை அகற்ற வழியின்றி பாரிய சிரமத்துக்கு முகம் கொடுத்துள்ளனர் என்று மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர்இஅருட்பணி மார்க்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர சபை மற்றும் மன்னார் தீவு எல்லைக்குள் வாழும் மக்கள் தங்கள குப்பைகளை அகற்ற முடியாத நிலைக்கு நீண்ட காலமாக பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.



இது தொடர்பாக மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவானது சனிக்கிழமை (28) காலை மன்னார் மாந்தைப் பகுதியில் அமைந்துள்ள கழிவுகள் கொட்டும் இடத்துக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றினை மேற்கொண்டது.

இதன் போது மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி மாக்கஸ் அடிகளார் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

மன்னார் நகர சபையின் அதிகாரத்துக்கு கீழ் இயங்கி வந்த கழிவுகள் கொட்டும் இடமானது பல்வேறு பிரச்சினைகள் காரணமாக அந்த இடத்தில் நிர்வாகம் செய்வதற்கான தடைகள் விதிக்கப்பட்டன. அப்பகுதியில் குப்பைகள் கொட்டுவது நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் நடைபெற்ற சில சட்ட விரோதமான செயற்பாடுகள் இதற்குக் காரணமாக அமைந்துள்ளன. அதனால் மன்னார் மாவட்டத்தில் தீவுப் பகுதி மற்றும் வெளியே உள்ள மக்கள் கழிவுகளை அகற்ற வழியில்லாத நிலையில் சொல்லொனாத் துயரத்துக்கு ஆளாகியுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசி, இந்த இடத்தில் மீண்டும் கழிவுகளைப் போட முடியுமா என்பது தொடர்பில் கலந்துரையாடி இந்த பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்ட வேண்டும்.

இந்த நல்ல நோக்குடன் மன்னார் பிரஜைகள் குழுவினர் ஆகிய நாங்கள் இந்த இடத்துக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளோம்.

இது தொடர்பாக உரிய தரப்பினருடன் பேசிஇ விரைவில் மக்கள் எதிர் நோக்கியுள்ள இந்த பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்ட முடியும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறோம்.– என்றார்.

# நீந்திக் கடந்த நெருப்பாறு நா. யோகேந்திரநாதன்!

## ஈழத்து எழுத்துலகின் ஒரு சரித்திரம்



(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளர், நடிகர், சிந்தனையாளர், பின்னணிக் குரல் கலைஞர், பல புத்தகங்களை எழுதியவர் என பன்முக ஆற்றலைக் கொண்ட நா.யோகேந்திரநாதன் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

இறுதிப் போரின் வலிகளைச் சுமந்த வரலாற்றைப் படைத்த மூத்த படைப் பாளர் நா.யோகேந்திரநாதனின் 'நீந்திக்கடந்த நெருப்பாறு' நாவல் அண்மையில் இலங்கை அரசின் அச்சுறுத்தலுக்கும் உள்ளானது.

போர்க் காலத்தில் எழுத்தாளராகவும் ஊடகவியலாளராகவும் பணியாற்றிய நா. யோகேந்திரநாதன், புலிகளின் குரல் நாடகங்கள் வழியாகவும் பிரபல மாக அறியப்பட்டவர். இவர் இறுதி யுத்த அனுபவத்தைப் பல பாகங்களாக நீந் திக்கடந்த நெருப்பாறு என்ற நாவலாக எழுதியமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் எழுதிய '34 நாள் களில் நீந்திக் கடந்த நெருப்பாறு' நாவல் வெளியீட்டு விழா கிளிநொச்சியில் இவ்வருட ஆரம்பத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

தமிழ் தேசியக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில், அந்த அமைப்பின் தலைவரும் ஈழத்து எழுத் தாளருமான தீபச்செல்வன் தலை மையில் இடம்பெற்ற நிகழ்வில் , ஈழத் தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந திரநாதனின் நாவலுக்கு கிளி நொச்சியில் மகத்தான வரவேற்பு கிடைத்தது.

விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த போரான குடாரப்பு தரையிறக்கம் குறித்த இந்த நாவல் வெளியீட்டில் அரங்கம் நிறைந்த மக்கள் வருகை தந்தனர். மக்களின் மகத்தான வரவேற்புடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாவலின் அனைத்துப் பிரதிகளும் விற்றுத் தீர்ந்தன என்பது உண்மையான படைப்பாளிக்கு கிடைக்கும் கௌரவச் சான்றாகும்.

இதேவேளை இந்நிகழ்வில் ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாத னுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரனால் மதிப்பளிப்பு செய் யப்பட்டது.

இறுதி யுத்தம் குறித்த இந்த நாவல் மன்னாரில் இருந்து முள்ளிவாய்க்கால் வரையான துயரப் பயணத்தை பதிவு செய்துள்ளது. இதுவரையில் நீந்திக் கடந்த நெருப்பாறு நாவலானது இரண்டு பாகங்கள் வெளிவந்துள்ளன.

இறுதிப் பாகமான மரண மழையில் நீந்திக் கடந்த நெருப்பாறு வெளியிடப் பட்டது. போர் முடிவடைந்து பல ஆண்டு கள் கடந்துள்ள நிலையில் இந்த நூல் ஈழத் தமிழ் மக்களின் சோக வரலாற்றை மீண்டும் நினைவுபடுத்துகின்றது.

இந்த நிகழ்வில் படைப்பாளிகள், அரச ஊழியர்கள், இளைஞர், யுவதிகள், பொது மக்கள் எனப் பலரும் திரண்டு கலந்து கொண்டிருந்தமை விசேட அம்சமாகும்.

ஓர் எழுத்தாளன் இறந்துபோயினும் அவர்தம் எழுத்துக்கள் என்றும் உயிர்ப்புடன் வைத்திருப்பது அவரின் படைப்புக்களாகும்.

மகாதேவா ஆச்சிரமம் சைவச் சிறு வர் இல்லம் 2012, 34 நாள்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு, இடிபடும் கோட்டைகள், இமயம்: விருதுபெற்ற நாயகனை நெஞ்சாரப் பாராட்டி விரியும் வாழ்த்து மலர், காட்டு நிலா (வானொலி நாடகங்கள்), நீந்திக்கடந்த நெருப்பாறு, பூநகரியிலிருந்து புதுமாத்தளன் வரை நீந்திக் கடந்த நெருப்பாறு, மரண மழையில் நீந்திக்கடந்த நெருப்பாறு ஆகிய படைப்புகளை மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் வெளியிட் டுள்ளார்.

கிளிநொச்சியின் மைந்தனான இவர் திருவையாறு உப தபாலதிபராக வும் இருந்தார். போராட்ட காலத்தின் பதிவுகளைச் சிறப்பாக வெளிக் காட்டிய நா. யோகேந்திரநாதனின் பங்களிப்பு ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு அளப்பெரியது.

# இரவு நேரத்தில் மின் குமிழ்கள் ஒளிராமையால் மக்கள் அவதி

(மஸ்கெலியா )

மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலைக்கு செல்லும் பிரதான வீதிகளில் உள்ள மின் கம்பங்களில் மின் குமிழ்கள் ஒளிராத காரணத்தால் இரவு நேரத்தில் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயா ளிகள் மற்றும் பணியாளர்கள், வைத்தி யர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலைக்கு அருகில் உள்ள வீடுகளுக்குச் செல்லும் வீதிகளும் மிக மோசமாக உள்ளன. அத்துடன் வீதியோ ரங்கள் பற்றைக் காடாக உள்ளன.

இதனால் இரவு நேரத்தில் பன்றிகள் மற்றும் சிறுத்தை பீதியுடன் வைத்திய சாலைக்கு செல்ல வேண்டியுள்ளது என்று வைத்திய சாலையில் பணி புரியும் உத்தியோகத்தர்கள் தெரிவித் தனர்.



இந்த வைத்தியசாலை ஆரம்பிக் கப்பட்ட காலத்தில் வைத்திய சாலை வட்டாரத்தில் உள்ள சகல மின் கம்பங்க ளிலும் மின் குமிழிகள் பொருத்தப்பட்டு இருந்தன.

கடந்த சில ஆண்டுகளாக அவற்றை மஸ்கெலியா மின்சார சபை அகற்றியது. இன்று வரை அவை ஒளிரவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.





# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டக்களப்பில் சீன அரசால் உலர் உணவு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சீன அரசால் உலர் உணவுப் பொதிகள் ஞாயிற்றுக்கிழமை (29) மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரிடம் வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் கி சென்கொங் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக “சீனாவின் சகோதர பாசம்” எனும் தொனிப் பொருளின் கீழ் உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுனர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர வழிகாட்டுதலின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மட்டக்களப்பு மாட்ட செயலகத்தில் வைத்து இந்த உலர் உணவுப் பொதிகள் அரச அதிபரிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது கிழக்கு மாகாண ஆளுனரின் வேண்டுகோளுக்கு இணக்க சீன அரசால் 2000 உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் 770 பொதிகள் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது. மாவட்டத்தின் முக்கிய உற்பத்தித் துறைகளான மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுற்றுலாத்துறை உள்ளிட்ட அனைத்து துறைசார் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பிலான திட்டங்களையும் சீனத் தூதுவரிடம்மாவட்ட அரச அதிபர்உள்ளிட்ட அரச அதிகாரிகள் முன்வைத்துள்ளனர்.

இதனையடுத்து இலங்கைகான சீன அரசால் வழங்கப்பட்ட நிவாரண பொதி முதல் கட்டமாக மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பெரிய உப்போடை கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு பகிர்ந்தளித்தளிக்கப்பட்டன.

சீன இலங்கை சகோதர பாசம் எனும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பொதி ஒன்றின் பெறுமதி 6,500 ரூபா என சீனத் தூதுவர் கீ சென்ஹொங் அவரது உரையின் போது தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்த இலங்கைகான சீனா தூதுவர் கீ சென்ஹொங்க்கு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஜஸ்ரினா யுலேக்கா முரளிதரன் நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கினார்.

இந்த நிகழ்வில் சீனத் தூதுவரின் பாரியார் திருமதி ஜின் குவான், கிழக்கு மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலளார் கே.எம். அப்துல்லாஹ், மேலதிக அரச அதிபர்களான திருமதி சுதர்ஷினி ஸ்ரீ காந்த், திருமதி நவரூப ரஞ்ஜினி முகுந்தன் (காணி), சீன தூதரக அதிகாரிகள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.





# மட்டு. இராமகிருஷ்ண மிஷனில் நாளை கல்பதரு தின ஏற்பாடுகள்

(காரைதீவு நிருபர் சகா)

மட்டக்களப்பு ராமகிருஷ்ணமிஷினில் நாளை (01) புதன்கிழமை 138 ஆவது கல்பதரு தினம் அனுஷ்டிக்கபடவுள்ளது.

1886.01.01 இல் பகவான் ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்சர் உலகுக்குத் தெய்வீக அருளை அளித்த உன்னதமான நாள். அவரது சிஷ்யர்களிடையே பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய நாள்.

வேண்டியதை வழங்கும் கல்பதரு நாளை இராமகிருஷ்ண மிஷன்களில் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அந்த வகையில் மட்டக்களப்பு கல்லடி ராமகிருஷ்ண ஆச்சிரமத்தில் நாளை (01) புதன்கிழமை காலை 6 மணிக்கு சிறப்பு பூஜை மற்றும் பஜனை இடம்பெறும். காலை8 மணிக்கு ஆராத்ரிகம் இடம்பெற இருக்கிறது.

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் கல்பதரு தினம் அங்கு நடைபெறவுள்ளது.

# தடையை மீறி போராட்டம்: சென்னையில் சீமான் கைது

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவிக்கு நேர்ந்த துஷ்பிரயோக சம்பவத்தைக் கண்டித்தும் பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கேட்டும் தடையை மீறி போராட்டத்தில் ஈடுபட முயன்ற நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கைது செய்யப்பட்டார்.

சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில், மாணவி ஒருவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. சம்பவத்தில் கோட்டூர், மண்டபம் சாலை பகுதியைச் சேர்ந்த பிரியாணி கடை நடத்தி வரும் ஞானசேகரன் (வயது 37) கைது செய்யப்பட்டுள்ளார். பிணையில் வெளியே வர முடியாதபடி அவர் மீது 8 பிரிவுகளின் கீழ் பொலிஸார் வழக்கு பதிந்துள்ளனர்.

இந்நிலையில் இச்சம்பவத்தைக் கண்டித்து தமிழக எதிர்க்கட்சிகள் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றன. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு இல்லை, பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை எனக் கூறி, தி.மு.க. அரசைக் கண்டித்து தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தன்னைத் தானே சாட்டையால் அடித்து போராட்டம் நடத்தினார்.

அதேபோல், நேற்று அ.தி.மு.கவினர் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். தமிழகம் முழுவதும்



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அ.தி.மு.கவினர் கைது செய்யப்பட்டனர். இதற்கு கண்டனம் தெரிவித்த அக் கட்சி பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "அண்ணா பல்கலைக்கழக வளாக பாலியல் வன்கொடுமை வழக்கில் அனைத்து உண்மைக் குற்றவாளிகளும் பிடிபட்டு பாதிக் கப்பட்ட மாணவிக்கு நீதி கிடைக்கும் வரை அதிமுகவின் போராட்டம் தொடரும். இந்த வழக்கில் ஞானசேகரன் குறிப்பிட்ட அந்த 'சார்' யார்?" என்று கேள்வி எழுப்பினார்.

அதேபோல், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டும், அனைத்து இடங்களிலும் பெண்களுக் கான பாதுகாப்பை உறுதி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், பருவமழை புயல் உள்ளிட்ட பாதிப்புகளுக்கு மாநில அரசு கோரும் நிவாரணத் தொகையை முழுமையாக மத்திய அரசு வழங்க வேண்டும் என்பன உட்பட 3 கோரிக் கைகளை வலியுறுத்தி தமிழக ஆளுநரிடம், த.வெ.க. தலைவர் நடிகர் விஜய் மனு வழங்கினார்.

அண்ணா பல்கலை சம்பவத்துக்கு கண்டன அறிக்கை வெளியிட்டதோடு விஜய் நேற்று தன் கைப்பட ஒரு கடிதமும் எழுதியிருந்தார். அதில் தமிழ்நாட்டுப் பெண்களுக்கு அண்ணனாக, அரணாக இருப்பேன் எனக் கூறியிருந்தார்.

இந்நிலையில் இன்று நாம் தமிழர் கட்சியினர் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவிக்கு நேர்ந்த துஷ்பிரயோக சம்பவத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றனர்.

வள்ளுவர் கோட்டம் பகுதியில் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நுங்கம்பாக்கம் போலிஸார் அனுமதி மறுத்திருந்தனர். இந்நிலையில், தடையை மீறி நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தின் போது நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கைது செய்யப்பட்டார்.

அப்போது, "ஜனநாயக ரீதியில் போராட வந்த தன்னை பொலிஸ் ஒடுக்குகிறது" என்று சீமான் குற்றஞ் சாட்டினார்.



# திருப்பதி காணிக்கை பணத்தில் 100 கோடி ரூபா மோசடி

திருப்பதி ஏழுமலையானுக்கு பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய பணத்தில் சுமார் நூறு கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக ஆந்திர மாநில முதலமைச்சரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணிக்கையாக வழங்கப்பட்ட பல நாடுகளின் நாணயங்கள் இங்கிருந்து திருடப்பட்டுள்ளதாகவும் அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இங்கு மேற்பார்வையாளராக பணியாற்றிய ஒருவர், தனது உள்ளாடைக்குள் மறைத்து உண்டியலிலிருந்த பணங்களை திருடியுள்ளார் என சந்தேகிக்கப்படுகிறது. அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா மூலம் இது அவதானிக்கப்பட்டு வந்துள்ளது. சுமார் நூறு கோடி வரை இங்கு திருட்டு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என்று மத்திய இணை அமைச்சர் பண்டி சஞ்சய், தெலுங்கு தேசம் கட்சியின் எம்.எல்.சி ராம்கோபால் ரெட்டி உள்ளிட்ட பலரிடம் வேண்டுகோள் விடுக் கப்பட்டுள்ளது.





# தென் கொரிய ஜனாதிபதியை கைது செய்யுமாறு உத்தரவு

தென்கொரிய ஜனாதிபதி யுன் சுக் யோலை கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன

மேற்படி பிடியாணை சியோல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


நீதிமன்றத்தை தவிர்த்த குற்றச்சாட்டின் பேரில் இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தென் கொரியா ஜனாதிபதி யூன் சுக் யோல் கடந்த 3 ஆம் திகதி திடீரென நாட்டில் இராணுவ சட்டத்தை நடைமுறைப்படுத்தினார். அரசுக்கு எதிரான நடவடிக்கைகளால் இராணுவ சட்டத்தை நடைமுறைப்படுத்தியதாக அண்மையில் பதவி நீக்கம் செய்யப்பட்டு பதவியை இழந்தார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனவரி 6 ஆம் திகதிக்கு முன்னர் அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு சியோல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தென் கொரியாவில் தற்போதைய ஜனாதிபதி ஒருவருக்கு பிறப்பிக்கப்பட்ட முதல் பிடியாணை இது என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

டிசம்பர் 14 அன்று ஜனாதிபதி யூன் சுக் இயோல் பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து தென் கொரியப் பிரதமர் ஹான் டக்-சூ தற்காலிக ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# கொவிட் தோற்றம் குறித்த தரவுகளை சீனா பகிர்ந்து கொள்ள வேண்டும்

## உலக சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்தல்

கொவிட் தொற்றின் தோற்றம் குறித்த தரவுகளைப் பகிர்ந்து கொள்ளுமாறு உலக சுகாதார ஸ்தாபனம் சீனாவை வலியுறுத்தியுள்ளது.

சீனாவின் வூஹான் நகரில் கொவிட் தொற்றுப் பரவல் ஆரம்பித்து ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகின்ற நிலையில் உலக சுகாதார ஸ்தாபனம் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளது.

அத்துடன், இந்த தரவுகளைப் பகிர்வது ஒரு தார்மீக மற்றும் அறிவியல் கட்டாயமாகும் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

நாடுகளிடையே வெளிப்படைத்தன்மை, பகிர்வு மற்றும் ஒத்துழைப்பின்றி, எதிர்காலத்தில்





தொற்றுநோய்களைத் தடுப்பதற்கு உலக நாடுகளைத் தயார்ப்படுத்த முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளது.

விஞ்ஞானிகள் பலர் இந்த கொவிட் தொற்று இயற்கையாகவே விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவியதாகக் கருதுகின்றனர்.

இருப்பினும், சீனாவின் வூஹான் நகரில் உள்ள ஒரு ஆய்வகத்திலிருந்து பரவியிருக்கலாம் என்ற சந்தேகமும் நிலவுகிறது.

இதனிடையே, உலக சுகாதார ஸ்தாபனத்தின் வலியுறுத்தல் தொடர்பில் சீனா பதிலளிக்கவில்லை எனச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பக்கங்கள் 03

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 31/12/2024

## ஒட்டாவாவில் பாரியளவு போதை மாத்திரைகள் மீட்பு

கனடாவின் ஒட்டோவா பகுதியில் பாரிய அளவில் போதையில் மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளனனதெரிவிக்கப்படுகிறது.

ஒட்டோவா 417 ஆம் இலக்க அதிவேக நெடுஞ்சாலை 02



# கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகுமாறு கனடிய பிரதமரிடம் மீண்டும் கோரிக்கை

கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை பதவி விலக வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அட்லாண்டிக் பிராந்தியத்தின் லிபரல் கட்சி உறுப்பினர்கள் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

ஜஸ்டின் ட்ரூடோ கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசேட கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பிரதமர் பதவி விலக வேண்டும் என, நியூ பிரவுன்ஸ்விக் பிராந்திய நாடாளுமன்ற உறுப்பினர் வெயன் லோங் கோரியுள்ளார்.


எதிர் வரும் தேர்தலில் வெற்றி ஈட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டுமாயின் நிச்சயமாக பிரதமர் கட்சித் தலைமையில் இருந்து பதவி விலக வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு செய்யத் தவறினால் கான்சர்வேட்டிவ் கட்சி ஆட்சியை நிறுவும் என அவர் தெரிவித்துள்ளார்.


கனடாவின் அட்லாண்டிக் பிராந்திய வலய மாகாணங்களின் லிபரல் கட்சி உறுப்பினர்கள் பிரதமர் பதவி விலக வேண்டும் என கோரியுள்ளனர்.

கட்சித் தலைமை பதவியில் இருந்து அவர் விலக வேண்டுமென இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதமர் ட்ரூடோவிற்கு எதிராக மீண்டும் நம்பிக்கை இல்லா பிரேரணை கொண்டுவரப்பட உள்ளது.

இது எதிர்வரும் ஜனவரி மாதம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.





# மேற்கு கியூபெக் பகுதியில் நிலநடுக்கம் பதிவானது

கனடாவின் மேற்கு கியூபெக் பகுதியில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 4.1 ரிச்டர் அளவில் இந்த நில நடுக்கம் பதிவாகியுள்ளதாக கனடிய நில அதிர்வு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தை ஒட்டோவா மற்றும் கேடின்யூ ஆகிய பகுதிக 02



# புத்தாண்டை முன்னிட்டு முக்கிய வீதிகளுக்கு பூட்டு

எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு கனடாவின் ரெறான்ரோ நகரின் சில முக்கிய வீதிகள் மூடப்பட உள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் புத்தாண்டு கொண்டாட்டங்களை மேற்கொள்ளவும் பாதுகாப்பாக வீடு திரும்பவும் இவ்வாறு சில நடவடிக்கைகள் எடுப்பதாக ரொறன்ரோ நகர நிர்வாகம் அறிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை இரவு 10 மணி முதல் புதன்கிழமை அதிகாலை ஒரு மணி வரையில் ரொறன்ரோவின் சில வீதிகள் மூடப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

டவுன்ரவுன் கோர், குயின்ஸ் குயே வெஸ்ட், பே ஸ்ட்ரீட், யோர்க் வீதி உள்ளிட்ட சில வீதிகள் மூடப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரின் சில இடங்களில் வாண வேடிக்கை நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட உள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

எனவே பொதுப் போக்குவரத்து தொடர்பிலும் இவ்வாறு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டை முன்னிட்டு ரொறன்ரோவில் பல்வேறு கொண்டாட்ட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என குறிப்பிடத்தக்கது.





## மேற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ளிலும் உணர முடிந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நில அதிர்வு காரணமாக சேதங்கள் ஏதும் ஏற்பட்டு இருக்காது என அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

5 ரிச்டர் அளவிற்கு மேற்பட்ட நில அதிர்வுகளினால் பாதிப்புகள் ஏற்படக் கூடும் என கனடிய நில அதிர்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. கனடாவின் சில இடங்களில் இந்த நில அதிர்வு உணரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஒட்டாவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யில் இவ்வாறு பாரியளவு போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

வாகனம் ஒன்றை சோதனையிட்டபோது ஒன்றாரியோ மாகாண பொலிஸார் போதை பொருள்களை மீட்டுள்ளனர்.

இந்த சந்தேகநபர்களிடம் இருந்து 28000 டொலர் பணமும் நீக்கப்பட்டுள்ளது.

குடிபோதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இந்த வாகனம் சோதனை இடப்பட்டுள்ளது.

இதன்போது, அந்த வாகனத்தில் இருந்து பெருந்தொகையான போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த வாகனத்தை செலுத்திய சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த தகவலை வழங்கிய பொது மக்களுக்கு நன்றி பாராட்டுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# கனடாவில் பெருந்தொகை கொக்கெய்ன் போதை பொருளுடன் ஒருவர் கைது

கனடாவில் பெருந்தொகை கொக்கெய்ன் போதை பொருளுடன் நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிழக்கு ஒன்றாறியோ பொலிஸார் குறித்த நபரை கைது செய்துள்ளனர். ஸ்காப்ரோ பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபரிடமிருந்து சுமார் 50000 டொலர்கள் பெறுமதியான கொக் கெய்ன் போதை பொருள் மீட்கப்பட்டுள்ளது.

27 வயதான சந்தேக நபரிடமிருந்து சுமார் 500 கிராம் இடையினுடைய கொக்கேய்ன் போதை பொருள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும் அந்த சந்தேக நகரிடமிருந்து 1500 டொலர் பணமும் துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன.




# ஒன்றாரியோவில் எதிர்வரும் ஆண்டில் உணவு வங்கி பயன்பாடு அதிகரிக்கும்

ஒன்றாரியோ மாகாணத்தில் எதிர் வரும் ஆண்டில் உணவு வங்கிகளின் பயன்பாடு அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பெரும் எண்ணிக்கையிலான கனடியர்கள் உணவு பாதுகாப்பின்மையை எதிர் நோக்குகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதனால், ஒன்றாறியோ மாகாணம் முழுவதும் நிறுவப்பட்டு உள்ள உணவு வங்கிகளில் அதிக அளவான மக்கள் பயன் பெறுவதற்காக முயற்சிப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றாரியோவில் அமைந்துள்ள டெய்லி பிரட் புட் பேங்க் என்ற உணவு வங்கியில் கடந்த ஆண்டில் 3.75 மில்லியன் மக்கள் பயன் பெற்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2020 ஆம் ஆண்டில் வருடாந்தம் உணவு வங்கியில் பயன் பெறுவோரின் எண்ணிக்கை வெறும் 6 லட்சமாக காணப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அண்மைய ஆண்டுகளாக உணவு வங்கிகளில் பயன் பெறுவோரின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது.

பணவீக்கம், வாழ்க்கைச் செலவு உயர்வு உள்ளிட்ட பல்வேறு காரணிகளினால் இவ்வாறு உணவு வங்கியை தங்கி இருப்பவரின் எண்ணிக்கையில் அதிகரித்துள்ளது.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டிலும் கூடுதல் எண்ணிக்கையிலானவர்கள் உணவு வங்கிகளில் தங்கி இருக்கக் கூடும் எனவும் அடுத்த ஆண்டு ஒன்றாரியோ மாகாணத்தில் சுமார் 4.2 மில்லியன் பேர் உணவு வங்கிகளில் பயன்பெறக்கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.